த. நா.ச.பே. எண்: 001 நாள் : 09.01.2020

**மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 6.1.2020 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஆற்றிய பதிலுரை – 9.1.2020**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமகு ஆளுநர் அவர்கள் 6.1.2020 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலுரை ஆற்றுகிறேன்.

அறமும், தமிழும் வளர்த்த நற்றமிழ் நாயகி!

அறிவும், ஆளுமையும் மிக்க அன்னைத் தமிழரசி !

அகிலம் போற்றும் அன்பின் திருஉருவம் !

'அம்மையே' என்று வணங்கத் தோன்றும் 'அம்மா' என்னும் தெய்வம் !

சமூக நீதி காத்த சரித்திர வீராங்கனை!

காவேரியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வி!

தமிழர்களின் எண்ணங்களைப் பிரதிபலித்து "**விஷன் 2023**" தந்த தீர்க்கதரிசி !

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் எங்கள் குலச்சாமி!

மக்கள் மனதில் என்றென்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் மறைந்தும் மறையாத மக்கள் தலைவி!

இசைபட வாழ்ந்த **ஏழிசை** ராகம்!

சுவைபட பேசிய **அறுசுவை** அமுதம்!

மக்களை அரவணைக்கும் **ஐவகை** நிலம்!

நல்லதைப் போதித்த **நான்கு** மறை!

நாட்டைக் காக்கும் **முப்பெரும்** சக்தி!

வாழ்க்கையை நெறிப்படுத்தும் **இருவரிக்** குறள்!

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து எங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் குடியிருக்கும் ஒப்பற்ற **ஒரே** உன்னதத் தலைவி!

**எங்கள் அம்மா தெய்வதை போற்றி வணங்குகிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு அம்மாவின் திருமுகத்தால் இன்னமும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் இந்த மாமன்றம்; மாண்புமிகு அம்மாவின் உரை வீச்சால் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கும் இந்தப் பேரவை; எளியவர்களையும் வலியவர்களாக மாற்றி இப்பேரவையில் அமர வைத்த வல்லமை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களையும், இம்மாமன்றத்தையும் வணங்கி என் பதிலுரையை துவக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் **6.1.2020** அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரன் அவர்களால் வழிமொழியப்பட்ட இத்தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளை எடுத்துக் கூறியுள்ளார்கள். பாராட்டியும், குறை கூறியும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

2011ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மீண்டும் அம்மாவின் ஆட்சி மலர்ந்தபோது, ‘‘**துயரத்தை மறந்து விடுங்கள், இனி சிரித்துக் கொண்டே இருங்கள், உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமையும், அதை நான் உறுதி செய்கிறேன்**” என்றும், “**எங்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை, அளித்துள்ள பொறுப்புகளை கட்டாயமாக நிறைவேற்றுவோம்**’’ என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். அவர்கள், தன் ஆட்சிக் காலத்தில் சொன்னதை மட்டுமல்ல, சொல்லாமல் விட்ட நல்ல பல மக்கள் நலத் திட்டங்களையும் செயல்படுத்தினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

சங்க காலத்தில் நெடுஞ்செழியன் என்னும் மாமன்னர், பல மன்னர்களை போர்க் களத்தில் வென்றவர். போர் முனையில் மட்டுமின்றி, ஏர் முனையிலும் மன்னர் சிறந்து விளங்க வேண்டும் என்று எண்ணிய புலவர் ஒருவர்,

"**நிலன் நெறி மருங்கின் நீர்நிலைப் பெருக**" என்று

மன்னருக்கு அறிவுரை கூறினார். அதாவது, பகைவரை வென்று, அவர்களை சிறையில் இடுவதை விட, மழையால் பெருகும் நீரை ஏரிகளிலும், குளங்களிலும் தேக்குவதே ஒரு நாட்டிற்கு நலன் பயக்கும். அவ்வாறு நீரை தேக்கி வைத்தவர்களின் பெயர்தான் புகழோடு உலகத்தில் நிலைக்கும் என்றார். அப்புலவரின் கூற்றுக்கு இணங்க, நீண்ட நாட்களாக தூர்வாரப்படாமலும், சீரமைக்கப்படாமலும் இருந்த பெரிய ஏரிகள், சிறு பாசன ஏரிகள், குளங்கள், ஊரணிகள் மற்றும் குட்டைகள் போன்ற 34,871 நீர்நிலைகளை 2017 முதல் இன்று வரை 2,182 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள், **குடிமராமத்து திட்டத்தின்** கீழ், விவசாய சங்கங்கள் மூலமாக அவர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் பராமரிப்பில் உள்ள 1,315 நீர்நிலைகள் 811.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர ஆறுகள், ஓடைகள், கால்வாய்கள் போன்றவற்றில் 1,141 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 59 பெரிய தடுப்பணைகள் பொதுப்பணித் துறையின் மூலமும், 40 ஆயிரம் சிறிய தடுப்பணைகள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமும் கட்டப்பட்டுள்ளன.

வேளாண் பெருமக்கள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்கென அக்கறையுடன் செயல்படுத்தி உண்மையாக உழைக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசின் செயல்பாடுகளை இயற்கையே அங்கீகரிக்கும் வகையில், மாநிலம் முழுவதும் பருவ மழை பொழிந்து, தூர்வாரப்பட்ட பெரும்பாலான நீர்நிலைகள் நீர் நிறைந்து ததும்பி நிற்கின்றன.

காவேரி ஆற்றுப் பாசன பகுதிகளில், கடைமடை வரை தண்ணீர் செல்ல கடந்த காலங்களில் பல நாட்கள் ஆகும். ஆனால் தமிழ்நாடு முழுவதும்

குடிமராமத்து திட்டமும், காவேரி டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளும் செம்மையாக மேற்கொள்ளப்பட்டதால், இந்த ஆண்டு 15 முதல் 20 நாட்களுக்குள் கடைமடை வரை தண்ணீர் தங்குதடையின்றி சென்றடைந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் பயிர் சாகுபடி பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

"**கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி**" என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலுக்கு ஏற்ப, நமது விவசாயிகளை பேணிப் பாதுகாத்து, அவர்களுக்குத் தேவையான அனைத்து பணிகளையும் சரியான நேரத்தில் செய்து கொடுத்த காரணத்தால் தான், தமிழ்நாடு முழுவதும் கடந்த ஆண்டு இதே நாளில் 85 லட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் என இருந்த வேளாண் பயிர் சாகுபடி பரப்பு, இந்த ஆண்டில் இதுவரை 7 லட்சம் ஏக்கர் கூடுதலாக, அதாவது 97 லட்சத்து 31 ஆயிரம் ஏக்கரில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்தாண்டு, தமிழ்நாடு உணவு தானிய உற்பத்தியில் ஒரு புதிய மைல் கல்லை அடையும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்துச் செல்லவும், நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகப்படுத்தி பாதுகாக்கவும், வேளாண்மைக்கு நீர் திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்யவும், நன்னீர் தேவையை குறைக்கவும், நீர்நிலைகள் மாசுபடுவதை தடுக்கவும், கழிவு நீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி முறையில் உபயோகிப்பதை பெருமளவில் ஊக்கப்படுத்தவும், **நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்** என்ற ஒரு தீவிர மக்கள் இயக்கம் சென்ற ஆண்டு என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு வலு சேர்க்கும் விதமாக, சென்னை மாநகரில் பெருகிவரும் தொழிற்சாலைகளுக்கு தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் வகையில், கோயம்பேடு, கொடுங்கையூர் பகுதிகளில் நாளொன்றுக்கு தலா 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் என்னால் துவக்கி வைக்கப்பட்டன. **இவ்விரண்டு நிலையங்களின் உற்பத்தித்**

**திறன் தலா 60 மில்லியன் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது. இதன் மூலம் இந்தியாவிலேயே 20 சதவீதம் கழிவுநீர் மறுசுழற்சி செய்யப்படும் ஒரே நகரமாக சென்னை திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

மேலும், சென்னை மாநகரில் உள்ள கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் உள்ளிட்ட நீரோடைகளில் கழிவு நீர் கலப்பதை முற்றிலும் தடுத்திட 2,371 கோடி ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. மேலும், சென்னை குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களால் மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் தலா 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அதே போன்று, 27.6.2019 அன்று நெம்மேலியில் 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட ஒரு புதிய திட்டத்தினை நான் துவக்கி வைத்துள்ளேன். பேரூரில், 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இத்திட்டங்களினால் வரும் காலத்தில் பருவமழை பொய்த்தாலும் சென்னை நகர மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்க முடியும் என்பதை திடமாக இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், **கடந்த 3 ஆண்டுகளில்**, பொது மக்களின் குடிநீர்த் தேவைகளுக்காக புதுக்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் 57.81 லட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் சுமார் 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், தேனி, திண்டுக்கல், தென்காசி, விழுப்புரம், நீலகிரி, திருப்பத்தூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 12.57 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 373 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 15 நகர்ப்புர தனி குடிநீர்த் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதே போன்று கிருஷ்ணகிரி, தேனி, விருதுநகர், அரியலூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் 5.55 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 407 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 பாதாள சாக்கடைத் திட்டங்களும்

நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

ஒரு நாட்டின் முதுகெலும்பு விவசாயம் என்போம். "**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு**" என்றார் திருவள்ளுவர். "**சேற்றில் உழவன் கால் வைத்தால் தான் மக்கள் சோற்றில் கை வைக்க முடியும்**" என்பதை ஒரு விவசாயி என்ற முறையில் நான் நன்கு உணர்ந்தவன். கடந்த 8 ஆண்டுகளில் ஆறாவது முறையாக **உணவு தானிய உற்பத்தி 100** லட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி தமிழ்நாடு சாதனை புரிந்துள்ளது. மேலும், கடந்த 8 ஆண்டுகளில், 5 முறை மத்திய அரசின் **கிருஷி கர்மான் விருதினை** பெற்ற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வேளாண் பெருமக்களுக்காக **7 ஆயிரத்து 283 கோடி ரூபாய் பயிர் காப்பீட்டு** இழப்பீட்டு நிதியை பெற்றுத் தந்துள்ளது. **இது தேசிய அளவில் ஒரு சாதனையாகும்.**

2018ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் **அமெரிக்கன் படைப்புழு**வின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர்களை பாதுகாக்க அரசு உடனடி நடவடிக்கை எடுத்ததுடன், பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு 186 கோடியே 25 லட்சம் ரூபாய் நிவாரணமும் வழங்கியது மாண்புமிகு அம்மாவுடைய அரசு. இவ்வாண்டு அமெரிக்கன் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசே, 47 கோடியே 66 லட்சம் ரூபாய் செலவில் பூச்சிக்கொல்லி மருந்தினை தெளிக்க நடவடிக்கை எடுத்து, மக்காச்சோளம் பயிரிட்ட வேளாண் பெருமக்கள் இப்பயிர் பாதுகாப்பு நடவடிக்கையை பெரிதும் வரவேற்பை பெற்ற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக நடப்பு நிதியாண்டில், 31.12.2019 வரை

சுமார் 9 லட்சம் குறு, சிறு விவசாயிகளுக்கு 7,000 கோடி ரூபாய் **பயிர்க் கடன்** வழங்கப்பட்டுள்ளது. பருவ மழை சிறப்பாக இருந்ததாலும், சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளதாலும், இந்த ஆண்டு நெல் உற்பத்தி அதிகரிக்கும் என்பதால், வேளாண் பெருமக்களுக்கு உரிய விலை கிடைக்க, தேவைப்படும் இடங்களில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும்.

பல்வேறு தரப்பு மக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளை பரிசீலித்து, **சர்க்கரை குடும்ப அட்டைகளை, அரிசி குடும்ப அட்டைகளாக மாற்றுவதற்கு** நான் உத்தரவிட்டேன். இதன் மூலம், மக்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப, அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு போதிய மழையும், விவசாயத்திற்கு தேவையான தண்ணீரும் உள்ள காரணத்தாலும், அதிக பரப்பிலான பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருவதாலும், வேளாண் பெருமக்கள் இடுபொருட்கள் மற்றும் பிற பணிகளுக்காக கணிசமான பணத்தை செலவழித்திருப்பதாலும், மக்கள் அனைவரும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாட **1,000 ரூபாயுடன்** கூடிய பொங்கல் தொகுப்பு வழங்க நான் உத்தரவிட்டு, அதன்படி அனைத்து **அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இன்றையலிருந்து** வழங்கப்பட்டு வருகிறது என்று இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தில் உதித்த விலையில்லா கறவை மாடுகள், விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் ஆகியவற்றினால் **சமீபத்தில் வெளியான கால்நடை மற்றும் பறவை இனங்களுக்கான கணக்கெடுப்பில், தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை 7.6 சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளது. மாநில பொருளாதார வளர்ச்சியில் கூட கால்நடைத் துறை வளர்ச்சியின் பங்கு கூடியுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.** இதன் காரணமாக, கிராமப்புற பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுள்ளது.

வேளாண் பெருமக்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள் சென்றடையும் நோக்குடன், தலைவாசல் கூட்டு ரோட்டுக்கு அருகில், **நவீன கால்நடைப் பூங்கா** ஒன்று சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது நான் அறிவித்தேன். அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அமெரிக்க நாட்டில் உள்ள உலகப் புகழ் பெற்ற பஃபலோ கால்நடைப் பண்ணையை பார்வையிட்டு அங்கு பயன்படுத்தப்படும் நவீன யுக்திகளை தமிழ்நாட்டில் உள்ள வேளாண் பெருமக்களும் பயன் அடையும் வகையில், தலைவாசலில் புதியதாக உருவாக்கப்பட உள்ள கால்நடைப் பூங்காவில் பயன்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். இவ்வளாகத்தில் தமிழ்நாட்டின் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல திட்டங்களுக்கு முன்னோடியாகத் திகழும் நமது மாநிலத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவையைப் போலவே, கால்நடைகளின் அவசர சிகிச்சைக்கென '**அம்மா ஆம்புலன்ஸ்**' சேவையை துவக்கி வைத்து, மாண்புமிகு அம்மாவின் அரசு விவசாயிகள் பயன்பெற செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் 200 கோடி ரூபாய் செலவில் திருவற்றியூர் குப்பம், 120 கோடி ரூபாய் செலவில் தரங்கம்பாடி மற்றும் 100 கோடி ரூபாய் செலவில் கடலூர் முதுநகர் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க மத்திய அரசின் மீன்வளம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் மேற்கண்ட மீன்பிடி துறைமுகங்களுக்காக தமிழ்நாடு அரசு மத்திய அரசுடன் 420 கோடி ரூபாய்க்கு புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்துள்ளது. **மத்திய அரசின் இத்திட்டத்தின் கீழ் இதுவரை அதிக அளவு நிதி உதவி பெற்ற மாநிலம் தமிழ்நாடு ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.**

மேலும், கடலில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் மீனவர்களின் பாதுகாப்பினை தொடர்ந்து உறுதிபடுத்திட தமிழ்நாடு அரசு முன் உதாரணமாக நடவடிக்கை

எடுத்து வருகிறது. ஆழ்கடல் மற்றும் அண்மைக்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கு **25,000** VHF கருவிகள், **160** செயற்கைக் கோள் கருவிகள், இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் மூலம் **507** டிரான்ஸ்பான்டர் கருவிகள் மற்றும் **200** நாவிக் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து மீனவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

சுகாதாரம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பல்வேறு முன்னேற்றங்களையும், தொழில் நுட்பங்களையும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து கொண்டு தமிழ்நாட்டில் செயல்படுத்திடவும், வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்களிடமிருந்து முதலீடுகளைப் பெற்று தமிழ்நாட்டை மேலும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லவும், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு **26.8.2019** முதல் **10.9.2019** வரை நான் அரசுமுறை பயணம் மேற்கொண்டேன்.

இங்கிலாந்திலுள்ள சர்வதேச அளவில் புகழ்பெற்ற கிங்ஸ் மருத்துவமனையின் கிளையினை தமிழ்நாட்டில் துவக்கிட அந்நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து இடப்பட்டது. அதன் அடிப்படையில், அந்நிறுவனத்துடன் பல்வேறு நிலையிலான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. **விரைவில் தமிழ்நாட்டில் கிங்ஸ் கிளை மருத்துவமனை அமைக்கப்படும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் அதிகரிக்கவும், உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளை பெறவும், தமிழ் நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாடுவாழ் தமிழ் மக்களையும், பிற முதலீட்டாளர்களையும் வரவேற்கும் வகையில் ‘‘**யாதும் ஊரே**’’ என்ற முன்னோடித்

திட்டத்தை கடந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் நான் அறிவித்து, இத்திட்டத்தை அமெரிக்காவில் நான் துவக்கி வைத்தேன்.

இந்தப் பயணத்தில், இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளிலும், துபாயிலும் உள்ள தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து, அதன் மூலம் **8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதலீடுகளை ஈர்த்து 41 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து இடப்பட்டன. இதனால் 35 ஆயிரத்து 520க்கு மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன.** மேற்படி ஒப்பந்தங்களில் 5 நிறுவனங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன.

மேலும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், குறிப்பாக தமிழ் இளைஞர்கள், தமிழ்நாட்டில் பல்வேறு முதலீடுகளைச் செய்ய அதிக ஆர்வம் காட்டி வருவதும் இந்த அரசுமுறைப் பயணத்தின்போது நான் அறிந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் மூலம் ஒற்றைச் சாளர அனுமதிகளை நேரடியாகக் கண்காணித்து விரைவுபடுத்திட எனது தலைமையில் ஒரு தனிக் குழு, முதலமைச்சர் அலுவலகத்தில் முதலீடு செய்வதை எளிதாக்குதல் பிரிவு, பாதுகாப்பு மற்றும் வானூர்தி தொழில் பூங்கா, மின்சார வாகனப் பூங்கா, Start-Up எனப் புத்தொழில்களை ஊக்குவிக்க தனிக் கொள்கை, தகவல் தொழில்நுட்பக் கொள்கை, வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை என தொழில் துறை மேம்பட பல்வேறு கொள்கைகளை வகுத்து, திட்டங்களை செயல்படுத்தி மாண்புமிகு அம்மாவின் அரசு வெற்றி கண்டு வருகிறது.

2015ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்ற ஆண்டு ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் 10 லட்சம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் 3 லட்சத்து 501 கோடி ரூபாய் அளவிற்கான

தொழில் முதலீடுகள், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஈர்க்கப்பட்டன. இவற்றில் 272 நிறுவனங்கள் பணிகளை துவக்கி, பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. **இது, கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் ஏறக்குறைய 90 சதவீதமாகும். இது மாண்புமிகு அம்மாவின் அரசு மீது தொழில் முதலீட்டாளர்கள் கொண்ட திடமான நம்பிக்கையை காட்டுவதாக உள்ளது.**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை சார்பில் கையொப்பம் இடப்பட்ட 3,592 தொழில் திட்டங்கள், தங்கள் பணிகளைத் துவக்கி பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

வெற்றிகரமாக நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பிறகு, இதுவரை 19 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 63 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 83 ஆயிரம் வேலை வாய்ப்புகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

**தொழில் சிக்கல்கள் காரணமாக மூடப்பட்ட நோக்கியா நிறுவன தொழிற்சாலையினை வாங்கி, மின்னணு சாதன உற்பத்தியினை மேற்கொள்ள சால்காம் நிறுவனம் உடன்பாடு செய்துள்ளது.**

**இது தவிர, உலக முதலீட்டாளர் மாநாட்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி நோக்கியா சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் மின்னணு சாதன உற்பத்திக்கான பணிகளை துவக்கியுள்ளது. இதன் மூலம் 20,000 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.**

இவ்வாறு, முந்தைய காலங்களில் பல்வேறு காரணங்களால் செயல்படாமல் நின்ற தொழில் நிறுவனங்கள் கூட, தற்போது இந்த மக்கள் நல அரசின் தொடர் முயற்சிகளால் புத்துயிர் பெறும் சிறப்பான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

**தேசிய பொருளாதார ஆராய்ச்சிக் கழகம் (NCAER) வெளியிட்டுள்ள 2018ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், முதலீட்டை ஈர்க்கும் ஆற்றல் மிக்க மாநிலங்கள் பட்டியலில், தமிழ்நாடு 2ஆம் இடத்தை பெற்றுள்ளது** என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் **அன்னிய நேரடி முதலீடு** கடந்த ஆண்டுகளில் ஒரு லட்சத்து 33 ஆயிரம் கோடி ரூபாய் என இருந்தது. கடந்த 3 ஆண்டுகளில் அது ஒரு லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. அதாவது சுமார் 47 ஆயிரம் கோடி ரூபாய் அன்னிய நேரடி முதலீட்டினை மாண்புமிகு அம்மாவின் அரசு கூடுதலாக ஈர்த்துள்ளது என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

“**கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்,**
**கவலை உனக்கிலை ஒத்துக்கொள்**”

என்ற நாமக்கல் கவிஞர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, திறன்மிகு மனித வளத்தை உருவாக்கும் நோக்கத்துடன், மாண்புமிகு அம்மாவின் அரசு திறன் மேம்பாட்டிற்கான குறைந்த மற்றும் நீண்ட கால பயிற்சிகளை அளிப்பதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் 28 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்துள்ளதும், இயங்கி வரும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 53 புதிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளதும் இதற்குச் சான்றாகும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், **அரசு** மற்றும் அங்கீகரிக்கப்பட்ட **தனியார்** பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து, இது வரை **சுமார்** 7 லட்சம் இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சிகளை வழங்கியுள்ளது. **இந்தியாவிலுள்ள தலைசிறந்த 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 5 தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் செயல்படுவது குறிப்பிடத்தக்கது. முதன்முறையாக சுகாதாரத் துறை, ஆட்டோமொபைல் மற்றும் சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்துக்காக மூன்று உயர்திறன் பயிற்சி மையங்கள் அமைக்க சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இது பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாகச் செயல்படும்.**

**இத்தருணத்தில் மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான திறன் போட்டியில் தமிழ்நாடு முதல் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**"ஒரு தாய் மக்கள் நாம் என்போம்,**
**ஒன்றே எங்கள் குலம் என்போம்"**

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்பவும், அனைத்து சமுதாயத்தினரின் நலனையும் பேண வேண்டும் என்ற அடிப்படையிலும், தமிழ்நாட்டில் வன்னியர் சமுதாயத்தினர் முன்னேற்றத்திற்காக "**வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் சட்டம் 2018**" என்கிற புதிய சட்டத்தினை மாண்புமிகு அம்மாவின் அரசு இயற்றியது. அச்சட்டத்தை செவ்வனே செயல்படுத்திட ஒரு வாரியம் அமைத்து, அவ்வாரியம் திறம்பட செயலாற்ற போதுமான அளவு நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது.

பிறமலைக் கள்ளர் உள்ளிட்ட பல்வேறு சீர்மரபினருக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் மத்திய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவின் கீழும், அதே நேரத்தில் தமிழ்நாடு அரசின் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இட ஒதுக்கீட்டின் கீழும் பயன்களைப் பெறும் வகையில் உரிய அரசாணை வெளியிடப்பட்டு, அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழும் ஒவ்வொரு குடியிருப்பு பகுதிகளிலும் இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், பாதை வசதிகள், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு, கடந்த இரண்டரை ஆண்டுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கி பணிகளை மேற்கொண்டு வருகிறது.

சிறுபான்மை மக்களின் பாதுகாவலர்களாக விளங்கிய மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் வகுத்துத் தந்த பாதையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த அரசு, சிறுபான்மை மக்களை பாதுகாக்கும் அரணாக

விளங்கி வருகிறது. இந்த பேரியக்கத்தின் தலைவர்கள் வகுத்துத் தந்த பாதையில் ஆட்சி செய்யும் இந்த அரசு, சிறுபான்மை மக்களை பாதுகாப்பதில் எக்காலத்திலும் உறுதியாக இருக்கும்.

ஹஜ் புனிதப் பயணத்திற்கான மானியத்தை மத்திய அரசு நிறுத்தினாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு ஆண்டுதோறும் 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதனை தொடர்ந்து வழங்கி வருகிறது. ஹஜ் குழுவிற்கான நிர்வாக மானியத்தை 30 லட்சம் ரூபாயிலிருந்து 50 லட்சம் ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் அரசு மானியம் ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாயிலிருந்து 2.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 3 ஆயிரத்திற்கும் அதிகமான பள்ளிவாசல்களுக்கு நோன்புக் கஞ்சி தயாரிக்க 5,145 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. நாகூர் தர்கா சந்தனக் கூடு திருவிழாவிற்கு தேவைப்படும் சந்தனக் கட்டைகளை அரசே ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. மாவட்ட காஜிக்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. உலமாக்களின் மாதாந்திர ஓய்வூதியம் 1,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் வஃபு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 3 கோடி ரூபாய் தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. 2011 முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் சிறுபான்மையின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக தமிழ்நாடு சிறுபான்மையின பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக 215.22 கோடி ரூபாய் அளவிற்கு குறைந்த வட்டியில் கல்விக் கடன், தனி நபர் மற்றும் சிறுகடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய நெகிழியை தடை செய்து, அதனை நடைமுறைப்படுத்தியும் வருகிறது மாண்புமிகு அம்மாவின் அரசு. வருங்கால சந்ததியினர் நெகிழியினால் பாதிப்பு அடையாமல் இருக்க வேண்டுமெனில்

இதைத் தொடர்ந்து முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்றும், இதற்கு மக்கள் தங்கள் முழுமையான ஒத்துழைப்பினை நல்க வேண்டும் என்றும் அனைவரையும் இந்த நேரத்தில் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவினை ஏராளமான மக்கள் பார்வையிட்டு, பயன் பெற்று வருகின்றனர். இப்பூங்காவை நானே மூன்று முறை நேரில் சென்று பார்வையிட்டுள்ளேன். இப்பூங்காவில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவைப்படும் நிதி ஒதுக்கீடு செய்து சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தமிழ்நாடு அரசு நீடித்த நிலையான வளர்ச்சியினை குறிக்கோளாகக் கொண்டு, சுற்றுச் சூழலுக்கு கேடு விளைவிக்காத, எலக்ட்ரிக் பேருந்துகள், எலக்ட்ரிக் கார்கள் மற்றும் ஆட்டோக்களை உற்பத்தி செய்வதற்கும், அதற்கான முதலீட்டிற்கும், அதை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும் போதிய ஊக்கமளித்து வருகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன் முறையாக பொதுப் போக்குவரத்துக்கு மின் பேருந்துகளை கடந்த ஆகஸ்ட் மாதம் 28ஆம் தேதி நான் துவக்கி வைத்துள்ளேன். அதே போல, 16.9.2019 அன்று மின் வாகனக் கொள்கை 2019ஐ வெளியிட்டுள்ளேன்.

கடந்த நவம்பர் மாதம் 29ஆம் நாளன்று சுற்றுச்சூழலுக்கு உகந்த, மின் ஆட்டோக்களையும் நான் துவக்கி வைத்தேன். இது, அரசுமுறை பயணமாக நான் துபாய் சென்றிருந்த போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆனதாகும் என்பதை பெருமையுடன் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,**

**தமிழ்நாடு கேரள மாநிலங்களுக்கு இடையே**, முல்லைப் பெரியாறு, ஆழியாறு – பரம்பிகுளம், பாண்டியாறு – புன்னம்புழா, செண்பகவல்லி அணை,

நெய்யாறு பிரச்சனை என பல்வேறு பிரச்சனைகள் இருந்து வருகின்றன. "**எங்களுடைய மக்களுக்கு தண்ணீர் வேண்டும், விவசாயத்திற்கு தண்ணீர் வேண்டும்**'', என்று மாண்புமிகு கேரள முதலமைச்சருக்கு கடிதம் எழுதினேன். "**நீங்கள் நேரில் வாருங்கள் இது குறித்து பேசுலாம்**'', என்று அழைப்பு விடுத்தார் மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்கள். அந்த அழைப்பினை ஏற்று, நானே நேரடியாக சென்று கேரள முதலமைச்சரை சந்தித்தேன். நான் கேரள முதலமைச்சரை சந்திக்க சென்ற போது, மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களும் என்னோடு வந்தனர். இதைத் தொடர்ந்து செயலாளர்கள் அளவில் ஒரு கூட்டமும் நடத்தப்பட்டது. வருங்காலத்தில் இம்மாதிரி சந்திப்புகள் பல்வேறு நிலைகளில் நடத்தப்பட உள்ளன. இதன் மூலம் இரு மாநிலங்களுக்கு இடையே நிலவும் தண்ணீர் பிரச்சனைகளுக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல, கடந்த கோடை காலத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியின் போது, எனது உத்தரவின் பேரில், **மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆந்திரப் பிரதேச முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து, தெலுங்கு கங்கை திட்டத்தில்,** தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நீரினை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டனர். அதன் அடிப்படையில், பெறப்பட்ட நீரினைக் கொண்டு சென்னை பெருநகர மக்களின் குடிநீர் தேவை நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இத்தருணத்தில் மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரத்தை மேம்படுத்திட **கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டத்திற்கு** ஆந்திரா மற்றும் தெலங்கானா முதல்வர்களின் கூட்டத்தினை விரைவில் நடத்தி, மத்திய அரசு தயாரித்த கோதாவரி–காவேரி இணைப்பு திட்டத்திற்கான வரைவு திட்ட அறிக்கையின் மீது அவர்களின் ஒப்புதலை விரைவில் பெற வேண்டும் என நான் கடிதங்கள் மூலமாகவும், மாண்புமிகு பாரதப் பிரதமரை நேரில் சந்தித்தும் வலியுறுத்தியுள்ளேன்.

இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டிலுள்ள வறட்சியான பகுதிகளுக்கு நீர்வள ஆதாரத்தினை ஏற்படுத்தி, அங்குள்ள வேளாண் பெருமக்களின் துயர் துடைக்க, **காவேரி–குண்டாறு திட்ட முதற்கட்ட பணிகளை** செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் உதவியை எதிர்நோக்கி மாநில அரசு நிதியிலேயே வரும் நிதியாண்டில் இத்திட்டம் தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி நதியில் ஏற்படும் மாசுகளை நீக்கி, காவேரி நதியை தூய்மையாக்க "**நடந்தாய் வாழி காவேரி**" திட்டத்தினை மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஏற்கனவே கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கும் மற்றும் நிலத்தடி நீர் குறைவாக உள்ள பகுதிகளுக்கு பாசன வசதி அளிப்பதற்காகவும், **அத்திக்கடவு–அவிநாசி கால்வாய் திட்டம் 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது.**

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் 57 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் **தாமிரபரணி–கருமேனி ஆறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.** இத்திட்டத்தின் நில எடுப்பு பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளது என்பதையும், விரைவில் இத்திட்டம் நிறைவு பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி நதிநீர் மற்றும் முல்லைப் பெரியார் அணை பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டது மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் தான். தற்போது **தென்பெண்ணையாற்றின்** பாசன விவசாய பெருமக்களின் உரிமையை நிலைநாட்டவும் மாண்புமிகு அம்மாவின் அரசு **3.7.2019** அன்று ஒரு இடைக்கால மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இப்பிரச்சனைக்கு தீர்வு காண நடுவர் மன்றத்தினை அமைக்க மத்திய அரசை வலியுறுத்தியும், உச்ச நீதிமன்றத்தில் தொடர் நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

காவேரி மற்றும் முல்லை பெரியார் பிரச்சனைக்கு ஓர் தீர்வு கண்டது போல் இந்த பிரச்சனைக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு தீர்வு காணும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே!**

தமிழ்நாட்டிலுள்ள **12,524** ஊராட்சிகள், **528** பேரூராட்சிகளில் "**அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்**'' என்ற அற்புதமான திட்டம் விரைவில் துவக்கப்பட உள்ளது. இதற்காக இந்த ஆண்டு **76** கோடியே **23** லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அம்மா இளைஞர் விளையாட்டுக் குழுக்கள் அமைத்தல், அக்குழு உறுப்பினர்களுக்கு வாலிபால், கபடி, கிரிக்கெட், பூப்பந்து அல்லது இதர விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள் அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல், திறந்த வெளி உடற்பயிற்சி மையங்கள் அமைத்தல், போட்டிகள் நடத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற செய்தியை அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே!**

எதிர்காலத்தில், தொழில்நுட்பம் மற்றும் மின் ஆளுமை மூலமாக மக்களுக்கு சிறந்த சேவை புரியும் அரசு தான் ஒரு நல்ல அரசாகத் திகழ முடியும். ஆளுமையின் ஒவ்வொரு அம்சத்திலும், அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அந்த வகையில், தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு துறையும், முகமையும் மேற்கொண்ட பல்வேறு முன் முயற்சிகள் நல்ல பலனை தந்துள்ளன. பெரிய அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கு சான்றாக, நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையின் படி, இந்தியாவில் **அதிக புதுமைகளை படைக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.**

**2018–19**–ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதி ஒரு லட்சத்து **20** ஆயிரத்து **899** கோடி ரூபாயாகும். இதனால் **6** லட்சத்து **60** ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளன. இதன் மூலம் மென்பொருள் ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பில் தமிழ்நாடு, இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது.

அனைவருக்கும் வளர்ச்சி என்ற எண்ணத்தை ஈடேற்றிட இல்லந்தோறும் இணையம் என்ற கொள்கையை செயல்படுத்தும் வண்ணம், அரசின் அனைத்து சேவைகளையும் கிராம மக்களும் அடையும் வகையில், அனைத்து கிராம ஊராட்சிகளும், **பாரத்நெட்** திட்டத்தை **1,815** கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள **12,524** கிராம ஊராட்சிகளும், கண்ணாடி இழை கட்டமைப்பு மூலம் இணைக்கப்படும். இதன் மூலம் அனைத்து கிராமங்களுக்கும் **1** Gbps அளவிற்கு குறையாமல் இணையதள வசதி வழங்கப்படும். இத்துடன் **500** கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசின் “**தமிழ்நெட்**” திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து நகரப் பகுதிகளுக்கும் அதிவேக இணையதள வசதி விரிவுபடுத்தப்பட உள்ளது. இந்த திட்டங்கள் ஓராண்டுக்குள் நிறைவேற்றப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே!**

கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, **12**–ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் **28** ஆயிரத்து **957** கோடியே **62** லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து சாதனை படைத்துள்ள அரசு அம்மாவுடைய அரசு.

கல்வித் துறை சிறக்க வேண்டும் என்பதற்காக கடந்த 8 ஆண்டுகளில் 43,587 புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர் காலிப் பணியிடங்கள் அனைத்தும் துரிதமாக நிரப்பப்பட்டு வருகின்றன. புதிதாக 248 ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 117 துவக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 1,079 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்திய அரசு அம்மாவுடைய அரசு.

இந்த சாதனைகளுக்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில், முக்கிய பாடங்களை எளிதாக புரியும் வகையில் ஒளிபரப்பவும், பள்ளிக் கல்வித் துறையின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லவும், பொதுத் தேர்வுகள், கல்வி உதவித் தொகை தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் தொடர்பாக மாணாக்கர்களிடைய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் "**கல்வி தொலைக்காட்சி**" என்ற பெயரில் ஒரு புதிய தொலைக்காட்சி என்னால் சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டது. இந்த தொலைக்காட்சியில் 24 மணி நேரமும் மாணாக்கர்களுக்கு பயன்படக்கூடிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு மிகுந்த வரவேற்பை பொதுமக்களிடத்திலும் மாணாக்கர்களிடத்திலும் பெற்றுள்ளது என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்ள விழைகின்றேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே!**

**''கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி, பயில வகை செய்தல் எனது நோக்கமாகும்''** என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை துவக்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசும், 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கியுள்ளதுடன், 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் துவக்கியது. இதன் காரணமாக, உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவீதம் **49 என உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது** என்பதை பெருமையுடன் அவைக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர் 7 ஆக இருந்த சட்டக் கல்லூரிகளின் எண்ணிக்கை தற்போது 14 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர திருச்சிராப்பள்ளியில் ஒரு தேசிய சட்டப் பள்ளியும் மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

மேலும், மாண்புமிகு அம்மாவின் அரசு உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையினை ஏற்று 227 புதிய நீதிமன்றங்கள் திறப்பதற்கான அரசாணையை வெளியிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இது தவிர, பெண்கள் வன்கொடுமை, குழந்தைகள் பாலியல் தொல்லை போன்ற வழக்குகளில் விரைந்து நீதி கிடைக்க ஏதுவாக 16 போக்சோ (POCSO) நீதிமன்றங்கள் அமைக்க உத்தரவிடப்பட்டு, தற்போது 3 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 13 போக்சோ நீதிமன்றங்களும் விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே!**

**தமிழர்களின் தொன்மையை உலகத்திற்கு பறைசாற்றும் கீழடியில்** தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை, மக்கள் பார்வையிடும் பொருட்டு, மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் தொல் பொருட்கள் கண்காட்சி அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், அதனை நிரந்தரமாக காட்சிப்படுத்த, சிவகங்கை மாவட்டம் கொந்தகை கிராமத்தில் உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அருங்காட்சியம் 12 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது என்பதை இங்கே பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஏற்கனவே மாண்புமிகு அம்மாவின் அரசு ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் நிதி வழங்கியது போல, தற்போது அமெரிக்காவில் உள்ள **ஹுஸ்டன் பல்கலைக் கழகத்திலும் தமிழ் இருக்கை** அமைக்க ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே !**

> ''**காலத்தை வென்றவர், காவியமானவர்,**
> **வேதனை தீர்த்தவர் – நம் விழிகளில் நிறைந்தவர்**''

பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா மாநிலம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, புரட்சித் தலைவரின் நினைவைப் போற்றிடும் வகையில், கடந்த **27.2.2019** அன்று காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவரது நூற்றாண்டு வளைவு என்னால் திறந்து வைக்கப்பட்டு, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு புகழ் சேர்க்கப்பட்டுள்ளது.

> ''**பிறந்த நாடே சிறந்த கோவில்**
>
> **பேசும் மொழியே தெய்வம் – இதை**
> **மறந்திடாமல் வாழ்ந்து வந்தால்**
> **கோபுரமாகும் கொள்கை**''

என்று புரட்சித் தலைவர் பாடிய பாடலுக்கு ஏற்ப, தமிழுக்காகவும், தமிழ்நாட்டிற்காகவும் சேவை செய்த தியாகிகளை நினைவு கூருவதிலும், அவர்களுக்கு சிறப்பு செய்வதிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஒரு முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. கடந்த **3** ஆண்டுகளில் மட்டும், தமிழ்நாட்டில் **7** மணி மண்டபங்கள் திறந்து வைக்கப்பட்டு மறைந்த தலைவர்களுக்கு பெருமை சேர்த்துள்ளோம். அது மட்டுமன்றி, இதே சட்டமன்றப் பேரவையில், விடுதலைப் போராட்ட வீரரும், சமூக நீதிப் பாதுகாவலருமான திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களின் திருவுருவப் படமும் இங்கே திறக்கப்பட்டு அவருக்கு பெருமை சேர்த்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே!**

கடந்த **9** ஆண்டுகளில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு **75** ஆயிரத்து **268** கோடியே **72** லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 17ல் இருந்து 16ஆகவும், பேறு காலத்தில் தாய்மார்கள் இறப்பு விகிதத்தைப் பொறுத்தவரையில், 2030ல் அடைய வேண்டிய நீடித்த நிலையான இலக்குகள், நாம் எடுத்த பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளால் இப்போதே அடைந்து விட்டோம் என்பது ஒரு சரித்திர சாதனையாகும்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த ஆண்டு ஒரு வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளது. இந்த ஆண்டில் மட்டும் **தமிழ்நாட்டில் 9 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள்** தொடங்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஒரே ஆண்டில் 9 மருத்துவக் கல்லூரிகளை பெற்ற ஒரே அரசு மாண்புமிகு அம்மாவின் அரசுதான். இப்படி 9 மருத்துவக் கல்லூரிகள் துவங்குவதன் மூலம் கூடுதலாக 900 பேர் மருத்துவர்களாக படிக்கக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு அம்மாவின் அரசு தான் உருவாக்கித் தந்துள்ளது.

மேலும் **அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்** அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதலை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் இதுவரை 32,660 பணியிடங்களை நிரப்பியுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாக செயல்பட்டதற்காக மத்திய அரசின் தேசிய விருதுகளை **தமிழ்நாடு அரசு கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து பெற்று சாதனை படைத்த அரசு அம்மாவின் அரசு.**

**மருத்துவர்கள் தங்கள் கோரிக்கைகளை பல்வேறு காலகட்டங்களில் வலியுறுத்தி வந்தனர். அவர்களது கோரிக்கைகளை மாண்புமிகு அம்மாவின்**

**அரசு கவனத்துடனும் கனிவுடனும் பரிசீலனை செய்யும் என்பதை இப்பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே!**

“**தமிழ்நாட்டில், ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு தொழில் அல்லது வணிக நிறுவனமும் நிலையான தரமுள்ள தடையற்ற மின்சாரத்தை பெற வேண்டும் என்பது என்னுடைய நோக்கமாகும்**” என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத முயற்சியின் பயனாக பல்வேறு திட்டங்கள் மூலமும், புதிய மின் நிலையங்களை இயக்கியதன் மூலமும், நடுத்தர மற்றும் நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் மின் கொள்முதல் செய்வதன் மூலமும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமும், கூடுதல் மின்சாரம் மின்கட்டமைப்பில் இணைக்கப்பட்டு அனைவருக்கும் தடையில்லா மின்சாரம் என்ற நிலையை தமிழ்நாடு ஏற்கனவே எட்டியுள்ளது. கடந்த **3** ஆண்டுகளில் மட்டும் சுமார் **2,600** மெகா வாட் மின்சாரம் கூடுதலாக மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சூரிய எரிசக்தி அதிகம் கிடைக்கக்கூடிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். சூரிய எரிசக்தி உற்பத்தியை அதிகரிக்க “**சூரிய எரிசக்தி கொள்கை 2019**” வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கையின் படி சுமார் **9,000** மெகாவாட் திறனுள்ள சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் நிறுவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தொடர்ந்து மின் மிகை மாநிலமாகவும், தரமான தடையில்லா மின்சாரத்தை வழங்குவதன் காரணத்தினாலும், புதிய தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகின்றனர். அதுமட்டுமல்லாமல், சென்ற ஆண்டு கோடை காலத்தில் ஏற்பட்ட உச்சக்கட்ட மின் தேவைகள் எந்தவிதமான மின் தடையும் இன்றி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

"**சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்துவதும், மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதும் ஒரு அரசின் தலையாய கடமையாகும். மக்களின் முக்கிய பிரச்சனைகளையும், அவர்களின் உணர்வுகளையும், நியாயமான எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொள்ளும் தன்மையே நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைக்க செய்கிறது**" என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்களின் "**அமைதி, வளம், வளர்ச்சி**" என்ற கோட்பாட்டின்படி மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது.

சமீபத்தில் **மாமல்லபுரத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கும், மாண்புமிகு சீன அதிபர் திரு. ஷி ஜின்பிங் அவர்களுக்கும்** இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இரு பெரும் உலகத் தலைவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வுக்கு சிறப்பான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்த காவல் துறையினரை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், சீன நாட்டு அதிகாரிகளும், அதிபர் அவர்களும் வெகுவாக பாராட்டினார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நான் சட்டமன்றத்தில் அறிவித்தபடி, காவல் துறையின் பணிகளை மேலும் சிறப்பாக்கும் வகையிலும், நமது காவல் துறை இந்திய அளவில் முதன்மை இடத்தை தொடர்ந்து தக்க வைப்பதற்காகவும், மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து, பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்க "**நான்காவது போலீஸ் கமிஷன்**" அமைக்கப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது இடங்களில் குற்றங்கள் நடப்பதை தடுப்பதற்கும், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும்போது அவர்களின் நடவடிக்கைகளை அறிந்து கைது செய்வதற்கு ஏதுவாகவும், காவல் நிலையங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், காவல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் இணையதள முறைமையுடன் கூடிய **உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள்** தமிழ்நாடு முழுவதும் முழுவீச்சில் பொருத்தப்பட்டு வருகின்றன.

சென்னையில் மட்டும் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் கேமராக்களும், சென்னை உட்பட மாநிலம் முழுவதும் சுமார் 4 லட்சத்து 40 ஆயிரம் CCTV கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் குற்றங்கள் நடைபெறுவது பெருமளவில் குறைக்கப்பட்டதுடன், குற்றவாளிகளை மிக விரைவில் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கும் இத்திட்டம் பேருதவியாக அமைந்துள்ளது.

மகளிர் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்காக "**அம்மா ரோந்து வாகனம்**" மற்றும் எளிதில் புகார் அளிக்க வாட்சப் எண் மற்றும் "**காவலன்**" செயலி ஆகியவை சென்னை பெருநகரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. "**காவலன்**" செயலியைப் பற்றிய விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு, தற்போது லட்சக்கணக்கான மகளிர் இச்செயலியை பதிவிறக்கம் செய்து பெரும் வரவேற்பை நல்கி உள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் தேசிய அளவில் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் மிகக்குறைவாகவே உள்ளதாக சமீபத்தில் வெளியான தேசிய குற்றப் பகுப்பாய்வு அறிக்கை கூறுகிறது.

தமிழ்நாட்டில் **தேனியில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையம், அகில இந்திய அளவில் சிறந்த காவல் நிலையங்களில் 4வது இடத்தைப் பெற்றுள்ளது.**

**2018–19**ம் ஆண்டில், சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை தொடர்ந்து **2**வது முறையாக தேர்வு செய்து பிரபல ஆங்கிலப் பத்திரிகையான "**இந்தியா டுடே**" விருது வழங்கியுள்ளது. தமிழ்நாடு காவல் துறையினரின் சிறப்பான செயல்பாடுகளினால், மாநிலத்தில் சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி தீவிரவாத இயக்கங்கள் மற்றும் நக்ஸல் அமைப்புகளின் சட்ட விரோதமான செயல்கள் பெருமளவு தடுக்கப்பட்டு அமைதியான மாநிலமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே**

மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபரின் மாமல்லபுரம் சந்திப்பிற்குப் பிறகு, உலகமே மாமல்லபுரத்தை நோக்கி வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், மாமல்லபுரத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஏற்கனவே உள்ள வசதிகளை நவீனப்படுத்தவும் தனியே கருத்துரு ஒன்று தயாரித்து மத்திய அரசின் நிதி உதவியுடன் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

முக்கியமாக, பெண்களின் நல்வாழ்வுக்காக அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2011 ஆம் ஆண்டு முதல் 2017–18ஆம் ஆண்டு வரை 61,675 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டு உள்ளது என்ற செய்தியை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். 2018–19ஆம் ஆண்டில் 2 லட்சத்து 95 ஆயிரத்து 612 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 11 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மிகுதியாக 11 ஆயிரத்து 449 கோடி ரூபாய் வழங்கிய அரசு அம்மாவின் அரசு என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். 2019–2020ஆம் நிதியாண்டில் இதுவரை, 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 9ஆயிரத்து 45 கோடியே 88 லட்சம் கடனுதவிகள் 2 லட்சத்து 16 ஆயிரத்து 965 குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக 5 வகையான திருமண நிதியுதவித் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 726.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இது வரை ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 795 பயனாளிகளுக்கு 838.36 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது. 415.21 கோடி ரூபாய் நிதி உதவியும் திருமண திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. **மேலும்**

**குழந்தை பிறப்பில் பாலின விகிதத்தை உயர்த்தியதற்காக தமிழ்நாட்டிற்கு "நாரி சக்தி புரஸ்கார்" விருது மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. முதியோர் நலனை பாதுகாப்பதற்கென சிறந்த முறையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டதற்காக "வயோசே ரேஷ்ட்ரா சம்மான்" விருதும் மாண்புமிகு குடியரசு தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.**

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச் சத்து நிலையினை முன்னேற்றுவதற்கு **பிரதமரின் ஊட்டச் சத்து ஒருங்கிணைப்புத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்கான தேசிய விருதினை இவ்வாண்டு தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரம் உயர பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. அவர்களுக்கு **வேலைவாய்ப்பில் 4 சதவீத இட ஒதுக்கீடு** அளித்து, அவர்களுக்கு உகந்த பணியிடங்களை கண்டறிந்து இது வரை 1,483 நபர்களை பணியமர்த்தி உள்ளது. மூன்றாம் பாலினத்தவரும் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழும் வண்ணம், அவர்களுக்கும் அரசு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட அமைச்சர்களும் கிராமங்களுக்கே சென்று, மனுக்களைப் பெற்றுத் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டதன் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் **முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின்** மூலமாக 9 லட்சத்து 77 ஆயிரத்து 265 மனுக்கள் வரப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

அவற்றில், தகுதியான 5 லட்சத்து 18 ஆயிரத்து 946 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. 6 ஆயிரத்து 152 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக் கொள்ளப்படாத மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கிறேன். தீர்வு காணப்பட்ட மனுக்களில் சமூக பாதுகாப்பு திட்டத்தில் முதியோர் ஓய்வூதிய மனுக்கள் மட்டும் 1 லட்சத்து 54 ஆயிரத்து 888 மனுக்கள் ஆகும்.

பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமத்திற்கு செல்கின்ற போது வயது முதிர்ந்தவர்கள், உழைக்கும் திறனற்று இருக்கின்ற அந்த முதியவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியமாக 1000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தீர்கள். அந்த கோரிக்கையின் அடிப்படையிலே 5 லட்சம் முதியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பை கொடுத்து எல்லா அமைச்சர்களும், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நேரடியாக சென்று அந்த முதியவர்களால் கொடுக்கப்படுகின்ற மனுக்களை ஆய்வு செய்து, தகுதியான மனுக்களுக்கு இன்றையதினம் முதியோர் உதவித் தொகை வழங்குகின்ற அரசு அம்மாவுடைய அரசு. மேலும், விடுபட்டிருந்தால் இதுவரை 1 லட்சத்து 54 ஆயிரத்து 888 பேருக்கு தான் கொடுத்திருக்கிறார்கள், எஞ்சியவர்கள் இன்னும் கிட்டத்தட்ட 3 லட்சம் பேர்களுக்கு முதியோர் ஓய்வூதியத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இப்படிப்பட்ட குறைப்பாட்டை நீக்க வேண்டும் என்பதற்காகத் தான் தமிழகத்திலே 5 லட்சம் முதியவர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே மாவட்டந்தோறும் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக சென்று அந்த மனுக்களை பெற்று அதற்கு பரிகாரம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத்

தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் தகுதி வாய்ந்த முதியோர் உதவித் தொகை பெற, தகுதி வாய்ந்த நபர்களை கொடுத்தால் நிச்சயமாக அவருக்கு வழங்கப்படும். ஆகவே, இப்படி நீங்கள் சொன்ன காரணத்தினாலே தான், இதையெல்லாம் ஆய்வு செய்து கூடுதலாக 5 லட்சம் முதியவர்களுக்கு மாதந்தோறும் 1000 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற உத்தரவை நான் வழங்கி இருக்கின்றேன். அந்த அடிப்படையில் தான், 1 லட்சத்து 54 ஆயிரத்து 888 பேர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த மனுக்கள் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, கிட்டத்தட்ட 9 லட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்களை வாங்கினேன், அந்த மனுக்களை ஆய்வு செய்து, தகுதியான மனுக்களின் அடிப்படையிலே தான் 1 லட்சத்து 54 ஆயிரத்து 888 நபர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். மீதி இன்னும் இருக்கிறது. கிட்டத்தட்ட 3 லட்சம் பேர்களுக்கு கொடுக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் அதை நீங்கள் குறையாக நினைக்க வேண்டாம், நீங்கள் எப்படி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றீர்களோ, அதே நோக்கத்துடன் தான் நான் இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டு விட்டது. 5 லட்சம் முதியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று அரசாணை வெளியிடப்பட்டு விட்டது. அதற்கு நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. ஒன்றரை லட்சம் பேருக்கு தான் வந்திருக்கிறது, மீதம் மூன்றரை லட்சம் பேருக்கு கொடுக்கலாம். அதுமட்டுமல்ல, முதியோர் ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு 50,000 ரூபாய் வரை தான் சொத்து இருக்க வேண்டும். அதையும் 1 லட்சம் ரூபாயாக உயர்த்தி நாங்கள் அறிவித்திருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அந்த முதியோரே நேரடியாக கொண்டு போய் கொடுத்தால் கூட அதை நிறைவேற்ற வேண்டும் என்று நாங்கள் உத்தரவு வழங்கி இருக்கின்றோம். இது முதியோர் உதவி பிரச்சனை. இதில்

அரசியலே கிடையாது. உழைக்கும் திறனற்ற முதியவர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே இந்த திட்டத்தை நாங்கள் துவக்கி இருக்கின்றோம். பாகுபாடே கிடையாது. இதில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று கிடையாது. முதியோர் என்பவர்கள் பொதுவானவர்கள், உழைக்கும் திறனற்றவர்களான அவர்கள் ஒவ்வொருவருக்கும் செய்யும் சேவை நோக்கத்தோடு தான் இந்த திட்டத்தை அறிவித்திருக்கின்றோம். நீங்கள் சொன்னதை எல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு, நீங்கள் அடுத்த கூட்டத்திற்கு வருகின்ற போது, ஏற்கனவே நீங்கள் புகழ்ந்து பேச மாட்டீர்கள் என்று நேற்றே சொல்லி விட்டீர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சொல்லி விட்டார்கள், நாங்கள் எப்பொழுதுமே எதிர்த்து தான் பேசுவோம் என்று, இருந்தாலும் இந்த திட்டத்தையாவது புகழ்ந்து பேச வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொது மக்களுக்கு அரசின் சேவைகள் விரைந்து கிடைக்க வகை செய்யும் நோக்குடன், **மாண்புமிகு அம்மாவின் அரசு வரலாற்றுச் சாதனையாக 5 புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளது.** அதற்கான புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்களை நியமனம் செய்து முழு வீச்சில் மாவட்டங்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இப்புதிய மாவட்டங்களுக்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை வெற்றிகரமாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தியதால், மத்திய அரசிடமிருந்து குறைந்த அளவில் இழப்பீட்டுத் தொகை பெறும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளது.

தமிழ்நாடு வணிக மற்றும் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை ஜி.எஸ்.டி. மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று, பல வகையான சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு வரி

விலக்கும், வரி குறைப்பும் செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் பல்வேறு பொருட்களுக்கான விலை, தொடர்ந்து மக்கள் பயன்பெறும் வகையில் குறைப்பு செய்யப்பட்டது. மேலும் சில சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு விரி விலக்கு பெறவும், வரி குறைப்பு செய்யவும் கோரிக்கைகள் வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் அரசுப் பணியாளர்களின் பணிப் பதிவேடு எளிமையான முறையில் பராமரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு, சம்பளப் பட்டியல், பதவி உயர்வு, இட மாறுதல்கள் போன்ற விவரங்கள் நிகழ்நேர அடிப்படையில் உடனுக்குடன் பதியவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி, பணியாளர் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மத்திய அரசு அவ்வப்போது அறிவிக்கும் அகவிலைப் படி உயர்வினை மாநில அரசு ஊழியர்களுக்கும் உடனுக்குடன் வழங்கி வருகின்ற அரசு அம்மாவின் அரசு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

குடிசையில்லா தமிழ்நாட்டினை உருவாக்க, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், பல்வேறு வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சமுதாய நலப் பணிகளை செயல்படுத்தி வருகின்றது. கடந்த 8 ஆண்டுகளில், 1.92 லட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகள் 8,222.91 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

சென்னை தியாகராய நகர், பாண்டி பஜார் பகுதியில் சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் சுமார் 40 கோடி ரூபாய் செலவில் நடைபாதை வளாகம்,

வை–ஃபை வசதி, சிசிடிவி கேமராக்கள், ஸ்மார்ட் பைக்குகள், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் போன்ற நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கென திறக்கப்பட்டுள்ளது. இதற்கு முதியவர்கள், பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

மத்திய அரசின் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் நாட்டிலேயே அதிகபட்சமாக 11 நகரங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த ஒப்புதல் பெறப்பட்டு, 11,000 கோடி ரூபாயில் 413 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 72 பணிகள் முடிவடைந்தும், 206 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

2019–2020ஆம் நிதியாண்டில், நெடுஞ்சாலைத் துறை மூலம் 9,211 கி.மீ. நீளத்திற்கு சாலைகள், 2,582 எண்ணிக்கையில் சாலை பாதுகாப்புப் பணிகள், மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மற்றும் தாங்கு சுவர் அமைக்கும் 6,664 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு **ஒப்புதல்** அளிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் 5,451 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 65 ஆற்றுப் பாலங்களும், ஒரு சாலை மேம்பாலமும், 4 ரயில்வே மேம்பாலங்களும் கட்டி **முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.** 10,563 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 328 ஆற்றுப் பாலங்களும், 19 சாலை மேம்பாலங்களும், 42 ரயில்வே மேம்பாலங்களும், 2 நடை மேம்பாலங்களும் கட்டும் **பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

2017–18 முதல் 2019–20 முடிய 3 ஆண்டுகளில் சட்டமன்ற விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட மொத்தம் 453 அறிவிப்புகளில், 419 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 118 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக

நிறைவேற்றப்பட்டுள்ளன, **301** அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் உள்ளன. **25** அறிவிப்புகளுக்கு, திட்டப் பணிகளுக்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **8** அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையிலும், ஒரு அறிவிப்பு சம்பந்தமாக வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையிலும் உள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றது முதல் இன்று வரை **34** ஆயிரத்து **893** கோடியே **46** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **47** ஆயிரத்து **829** பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை அவைக்கு இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், **24** ஆயிரத்து **90** கோடியே **88** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **7** ஆயிரத்து **909** பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று, நாலடியாரில் இருந்து ஒரு பாடலை குறிப்பிட்டுப் பேசினார். இத்தருணத்தில், நன்னூலில் இருந்து கீழ்க்கண்ட பாடலை நான் குறிப்பிட விரும்புகிறேன்:-

‘‘**மன்னுடைய மன்றத்து ஒலைத் தூக்கினும்**
**தன்னுடை ஆற்றல் உணரார் இடையிலும்**
**மன்னிய அவையிடை வெல்லுற பொழுதினும்**
**தன்னை மறுதலை பழித்த காலையும்**
**தன்னைப் புகழ்தல்நம் தகும் புலவோற்கே**”

அதாவது, தன்னுடைய புலமைத் திறனை அறியாதவரிடத்தும், அவையில் வாதிட்டு வெற்றி பெற வேண்டிய சூழ்நிலையிலும், எதிரி தன்னைப் பழித்துரைக்கும் போதும், தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது தவறாகாது. இருந்தாலும், நாங்கள் எங்களைப் பற்றி தற்பெருமையாக ஆளுநர் உரையில் எதையும் குறிப்பிடவில்லை. மாறாக, இந்த அரசின் கொள்கைகளையும்,

திட்டங்களையும், சாதனைகளையும், நிகழ்த்தப்பட்ட சாதனைகளுக்காக பெற்ற விருதுகளையும் தான் குறிப்பிட்டுள்ளோம். இது தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் கிடைத்த பெருமையாகும்.

எல்லா ஆட்சிக் காலத்திலும், ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தில், ஆளுநர் உரையில் அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றி கோடிட்டுக் காட்டப்படுகின்றது. இதைத் தான் நீங்களும் செய்தீர்கள்; நாங்களும் செய்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

“**அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை. துன்பமும், துயரமும் வரும் பொழுதெல்லாம், அதனை எதிர்கொண்டு வெற்றி கண்டது, சுடர் முகம் ஏந்தும் உங்களைப் போன்ற உடன் பிறப்புகளைப் பெற்றதால் தான்**” என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக தொடர்ந்து வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தாலும், அவரது ஆசியுடன் ஆட்சியை நடத்தி வரும் நாங்கள் மிகவும் சாதாரணமானவர்கள் தான். ஒரு முதலமைச்சரின் வாரிசாகவோ, அரசியல் பின்புலம் உள்ள குடும்ப வாரிசாகவோ நான் இந்த இருக்கையில் அமரவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவரும் அப்படித் தான். விவசாய குடும்பத்தில் பிறந்த நான், மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில், அவரது தொண்டர்களை ஒருங்கிணைத்து பல்வேறு வகையிலும் மக்கள் நலனைப் பற்றியே சிந்தித்து ஆட்சி நடத்தி வருகிறேன். அதன் மூலம் தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இதன் பலனாக இன்று மத்திய அரசும், பல்வேறு தனியார் ஆய்வு நிறுவனங்களும், முன்னணி பத்திரிகை நிறுவனங்களும் தகுந்த ஆய்வுகளுக்குப் பின்னர் இந்தியாவிலேயே தமிழ்நாடு, பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு, முன்னணியில் இருப்பதாக அறிவித்துக் கொண்டே உள்ளன.

2018–19ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.17 சதவீதமாக உள்ளது. இது 2018–19ஆம் ஆண்டின் தேசிய வளர்ச்சி விகிதமான 6.81 சதவீதத்தைவிட அதிகமாக உள்ளது என்று ஒரு ஆங்கில நாளிதழ் தமிழ்நாட்டை பாராட்டியுள்ளது.

அதேபோல, மாண்புமிகு அம்மாவின் அரசு எத்தனையோ விருதுகள் வாங்கியிருந்தாலும், அதன் நல்லாட்சிக்கு ஒரு அத்தாட்சியாக வேளாண்மை, தொழில், மனிதவள மேம்பாடு, பொது சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், சமூகநல திட்டங்கள் உள்ளிட்ட பத்து துறைகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஐம்பது குறியீடுகளின் அடிப்படையில், **2019க்கான மத்திய அரசின் நல் ஆளுமை குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு முதலாவதாக வந்து சாதனை படைத்துள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவை அனைத்தும் மாண்புமிகு அம்மாவின் ஆசியினாலும், மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், கழகத்தின் உண்மைத் தொண்டர்களாலும், எங்களது நிர்வாகத் திறமையினாலும் மற்றும் மக்களின் ஒத்துழைப்பினாலும், கிடைக்கப் பெற்றது என்பதையும் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக்குக் கிடைத்த வெற்றி மாலைகள். இந்த வெற்றி மாலைகளைக் கண்டு பொறுக்க முடியாமல், சில எதிர்க் கட்சியினர் இந்த ஆட்சியின் காலத்தை இன்று, நாளை, 10 நாள், 100 நாள் என்று குறைத்து மதிப்பிட்டார்கள். அவர்களின் எண்ணத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில், இன்று விருதுகள் ஒன்று பத்தாகி, பத்து நூறாகி பெருகிக் கொண்டு, தமிழ்நாட்டில் விருது மழையாய் பொழிந்து கொண்டிருக்கிறது.

சிலர், இயற்கைப் பேரிடர் என்றாலும், குடிநீர் பற்றாக்குறை என்றாலும், உள்ளாட்சித் தேர்தல்கள் என்றாலும், எல்லாப் பிரச்னைகளிலும், மக்களை திசை திருப்பி போராட்டங்கள் நடத்துவதிலும், நீதிமன்றங்களில் வழக்குகளைப் போட்டு, அரசின் வேகத்திற்கு ஒரு வேகத்தடையாக இருக்கிறார்களே தவிர, வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கபூர்வமான எந்த ஒரு நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு அளிப்பதில்லை.

**“எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த வழியிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியிலே பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை நாங்கள் வைத்திருக்கின்றோம். அதேபோல அண்ணா அவர்களின் பெயரிலே, நம்முடைய இயக்கம் இன்றைக்கு இங்கே நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, நம்முடைய இயக்கம் மக்களுக்கு சேவை செய்வதிலே முதலிடத்தை பிடித்துக் கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை நம்முடைய இயக்கம் நனவாக்கி கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.**

**எனவே, சோதனைகளை எல்லாம் தாண்டி சுடச் சுட ஒளிவிடும் தங்கத்தைப் போல ஒளிமயமான எதிர் காலத்தை நோக்கி பீடு நடை போடுவோம்**” என்றார் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் கூற்றுப்படி, இந்த அரசு வெற்றி மேல் வெற்றி பெற்று, வெற்றி வாகை சூடி வருகிறது.

**அண்மையில் நடைபெற்ற விக்கிரவாண்டி மற்றும் நாங்குநேரியில் சட்டமன்ற இடைத் தேர்தலில் நமது கழகம் மிகப் பெரிய வெற்றி பெற்று, மக்கள் நம் பக்கம் உள்ளதை தெளிவாக்குகின்றது. ஊரக உள்ளாட்சித் தேர்தல்களில் தமிழ்நாடு மக்கள் நமக்கு அளித்த ஆதரவு இதனை உறுதிபடுத்தியுள்ளது. விக்கிரவாண்டி மற்றும் நாங்குநேரி இடைத்தேர்தலில் வாக்களித்து வெற்றிபெறவைத்த வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் 27 மாவட்டங்களில் நடந்து முடிந்த ஊரக உள்ளாட்சி தேர்தல்களில் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.** இதே போன்று, வரவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தலிலும், 2021லே நடைபெறும் சட்டமன்ற பொதுத் தேர்தலிலும் மக்களின் பேராதரவை தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பெற்று மூன்றாவது முறையாக கழகம் வெற்றி பெற்று, “**வீட்டுச் சுவற்றின் இடுக்கிலே முளைத்திருக்கும் செடிகளை மக்கள் ஆதரவுடன் கிள்ளி எறிவோம்**” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல, கழகத்திற்கும்,

கழக ஆட்சிக்கும் இடையூறு செய்பவர்களை மக்கள் ஆதரவுடன் கிள்ளி எறிவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

கடந்த இரண்டு நாட்களாக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் NRC-ஐ பற்றி, நீண்ட விவாதம் செய்தனர். அதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையினர் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதை தெளிவாகவும், விளக்கமாகவும் அறுதியிட்டும், உறுதியிட்டும் தெளிவுப்படுத்தி இருக்கின்றார்கள்.

**பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு மாண்புமிகு அம்மாவின் அரசும், தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கு மேலாக, சிறுபான்மையின மக்களுக்கு அரணாக இருந்து பாதுகாத்து வருகின்றது. இருபெரும் தலைவர்களின் வழியிலேயே, மாண்புமிகு அம்மாவின் அரசும் சிறுபான்மையின மக்களை தொடர்ந்து பாதுகாக்கும் அரணாக விளங்கும் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அரசியல் உள்நோக்கத்துடன், உண்மைக்குப் புறம்பாக பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், சிறுபான்மையின மக்கள் எள்ளளவும் ஐயப்படவோ, அச்சப்படவோ தேவையில்லை என்பதையும் திடமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

‘‘**நல்லவர் லட்சியம் வெல்வது நிச்சயம்**
**என்றும் அது தான் சத்தியம்**’’ என்று கூறி,

மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு உரிய பதிலை நான் அளித்திருக்கிறேன் என நம்புகிறேன். அவர்களது கோரிக்கை ஏதேனும் விடுபட்டிருப்பின், அதையும் அரசு கவனத்தில் கொண்டு, விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த இனிய நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும்,

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இத்தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**